# அதி நவீன முடநீக்கியல் சிகிச்சை: சர்வதேச பயிலரங்கு இன்று தொடக்கம்

**சென்னை, மார்ச் 28:** அதிநவீன முடநீக்கியல் சிகிச்சை தொடர்பான சர்வதேச பயிலரங்கு சென்னையில் வெள்ளி, சனிக்கிழமைகளில் (மார்ச் 29,30) நடைபெறுகிறது. போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் இப்பயிலரங்கில் ஸ்டெம் செல், திசு மாற்று உள்ளிட்ட மரபணு சார்ந்த சமகால சிகிச்சை முறைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளது.

இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட முடநீக்கியல் சிகிச்சைத் துறை வல்லுநர்கள் பங்கேற்க உள்ளனர். அவர்களுடன் இந்தியாவின் முன்னணி மருத்துவ நிபுணர்களும் கலந்து கொள்கின்றனர்.

பயிலரங்கின் முக்கிய அம்சமாக முடநீக்கியல் தொடர்பான சிகிச்சைகளை நேரடியாக மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்டு, அதுதொடர்பான விளக்கங்களை அளிக்க உள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

போரூரில் அமைந்துள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்வி நிறுவன வளாகத்தில் நடைபெறும் பயிலரங்க நிகழ்வுகளை ஆன்லைன் மூலமாக நேரலையில் உலகம் முழுவதும் காணும் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.